முதலமைச்சர் தலைவர் அலுவலகம்
12 AUG 2010
மாவட்டம்

204

19

## சுருக்கம்

சமூகநலன் – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்களின் பயனாளிகளுக்கு 2010–11 ஆம் ஆண்டின் பகுதி –II திட்டத்தின்கீழ் எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்குவதற்கு ரூ.18.50 இலட்சம் செலவினத்திற்கு ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

**சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉ தி–1) துறை**

அரசு ஆணை (நிலை) எண்.134

நாள். 15–06–2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
ஆனி மாதம் 1ம் தேதி

07398

படிக்கப்பட்டது:-

அரசு ஆணை (நிலை) எண். 82, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 31–05–2007.

---

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட அரசு ஆணையில் 2007–08 ஆம் ஆண்டில் பகுதி–II திட்டத்தின் கீழ் பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் 2,57,575 மாணவ மாணவியர்களுக்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வழங்க ரூபாய்.65 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது. தற்போது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களில் உள்ள பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர் வாங்கி வழங்கிட இவ்வாண்டு 18 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒப்பளிப்பு கோரி சமூக நல ஆணையர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

2) மேற்படி கருத்துருவை பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் 30834 மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் எவர்சில்வர் தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர் வாங்கி வழங்க 2010–2011 ஆம் ஆண்டில் பகுதி–II திட்டத்தின்கீழ் ரூ.18.50 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3) மேலே பத்தி 2 – ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

"2236 – சத்துணவு 02– சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102– மதிய உணவு திட்டத்தில் சேராதது AX – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் சமையல் பாத்திரங்கள் மாற்றுதல் –24 பொருள்களும் வழங்கலும் "
(த.தொ.கு.2236–02–102–AX–2408)



214

4) மேலே பத்தி 2ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பயன்படுத்தி ஊரக மற்றும் நகர்ப்புற பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் 30,834 மாணவ, மாணவிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்க தேவைப்படும் நிதியை தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு பிரித்து அளிக்க சமூக நல ஆணையருக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலும் 2010–11ஆம் ஆண்டில், இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களை உரிய காலத்திற்குள் தேர்வு செய்யவும், ஒப்பளிக்கப்பட்ட தொகையை மாவட்டங்களுக்கு பங்கீடு செய்யவும், 30,834 மாணவ மாணவிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர் வாங்கி வழங்கப்படுவதை கண்காணிக்கவும் சமூக நல ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

5) ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000–ன்படி 2010–11ஆம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வாங்கி வழங்கவும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6) இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அதன் அ.சா.கு.எண்.29587/சந/2010 நாள் 08– 06–2010ன்படி வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

பா. இராம மோகனராவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

சமூக நல ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர்/ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
சென்னை–113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
சம்பளம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர் (கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கு)
சம்பளம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர், மதுரை/கோவை.
உதவி சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–3
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–6/9/18/35.

நகல்
நிதி ((சந)த் துறை, சென்னை–600 009 (2 நகல்கள்)
சமூக நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட (சந–7)த் துறை,
சென்னை–9
நிதி (வரவு–செலவு பொ–1)த் துறை, சென்னை–9.
அரசு புள்ளி விவர வகைப்பாட்டு மையம், சென்னை–25.
இ.கோ/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்



215